பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Time Reader
11/50 PM. 
10/50 AM.
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (27-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 339



சுப்பசொனிக் குண்டுவீச்சில் பலியான அப்பாவிப் பொதுமக்களின் சிதைந்த மூன்று சடலங்கள்.

## குண்டுவீச்சுக்கு இரையான 10 அப்பாவிகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 27

அரியாலை நாவலடியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியான பத்துப்பேரின் விவரம்:-

★ விஜயா என்றழைக்கப்படும் செல்வராசா பத்மனோஜினி (வயது 19) இவர் நந்தாவிலில் இருந்து இடம்பெயர்ந்தவர்.

★ சின்னத்தம்பி பாஸ்கரன் (வயது 26) கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவர் இவர்கள் இருவரும் இரண்டொரு தினங்களுக்கு முன்னரே திருமணம் செய்து கொண்டனர்.

★ சி. குணசேகரம் (வயது 40) கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவர். இவரது வயிற்றின் கீழ்ப்பாகங்கள் எதுவும் இல்லை. குடல் முழுவதும் வெளியே அள்ளி எறியப்பட்டிருந்தது.

★ வைரமுத்து உதயகுமார் (வயது 25) கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்தவர். வயிறு நெஞ்சுப் பகுதிகள் முழுவதும் சிதறிக் காணப்பட்டன. கை, கால்கள் இல்லை

★ இரத்தினசிங்கம் ராஜேந்திரகுமார் (வயது 31) கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்தவர் இவரது மனைவியும் காயமடைந்தார்.

★ குணசேகரம் ஜெயச்சந்திரன் (வயது 23) கொக்குவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 'சுப்பசொனிக்' குண்டு வீச்சினால் 10 பொதுமக்கள் பலி; 9 பேர் காயம்

## அரியாலையில் நேற்றுப் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 27

அரியாலை, நாவலடிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுக் காலை 6.40 மணிக்கு, சுப்பசொனிக் விமானம் நடத்திய கண்மூடித் தனமான குண்டுவீச்சில் அப்பாவிப் பொதுமக்கள் 10 பேர் துடிதுடித்துப் பலியானார்கள். மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர். 3 வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை குடாநாட்டு வான் பரப்பில் திடீரென பிரவேசித்த சுப்பசொனிக் விமானம் அரியாலையில் எவரும் எதிர்பார்க்காதபடி வந்த கையோடு குண்டு வீச்சை நடத்தியது. முதல் குண்டு வயல் வெளியில் விழுந்து வெடித்தது. அடுத்த நிமிடத்தில் இரண்டாவது குண்டு வீசப்பட்டது.

மக்கள் பலர் கூடி நின்ற கிணற்றடிக்குச் சமீபமாக அந்த குண்டு விழுந்து வெடித்தது

ஓரிரு நிமிடங்களில் நடந்த அனர்த்தத்தினால், பத்துப்

(5 ஆம் பக்கம் பார்க்க)



தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் வயிறு பிளந்த நிலையிலும் பலியான இரு சகோதரர்கள்.

## நேற்று பெரும் அளவில் சண்டை இல்லை

### சிறு சிறு மோதல்கள் மட்டும்

யாழ்ப்பாணம், ஒக். 27

"சூரிய பிரகாசம்" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று சிறு சிறு மோதல்கள் நடந்தன. படையினர் பரவலான ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

10 ஆம் நாளாக தொடரும் இந்நடவடிக்கையில் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. (இ-3)

### புதன் நடந்த சண்டையில்

## படையினர் இருவர் பலி; 19 பேர் காயமுற்றனர்

"சூரிய பிரகாசம்" இராணுவ நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த சண்டையில் இரு படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 19 படையினர் காயமடைந்தனர் என்றும்—

இராணுவ பேச்சாளர் சரத்முனசிங்க நேற்று தெரிவித்தார். [ஒ-3]

## 4 தேசத் துரோகிகளுக்கு புதனன்று மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஒக். 27

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக — எதிரிகளின் கைக்கூலிகளாக — செயற்பட்ட 4 தேசத்துரோகிகளுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியா நகட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மயிலம்பாவெளியில் 5 படையினர் பலி

## புலிகள் கண்ணிவெடித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 27

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் உழவு இயந்திரத்தில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர் உழவு இயந்திரமும் சேதமடைந்தது.

எதுவித இழப்பும் இன்றி விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலில் ஏ. கே. ரக துப்பாக்கி— 2, அதற்குரிய ரவைக் கூடு— 2, நடுத்தர ரவை — 60 ஆகிய ஆயுத தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர். (ஒ 3)

## 2 மீனவரைக் காணோம்

குருநகர், ஒக். 27

மண்டைதீவுக் கடல்ஏரியில் நேற்று முன்தினம் (25-10-95) இரவு கடலட்டை பிடிக்கச் சென்ற மீனவர்களில் இருவர் திரும்பிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் ஒரே வள்ளத்தில் கூடச் சென்றிருந்த மூன்று மீனவர்கள் நேற்றுக் காலை கரை வந்து சேர்ந்தனர். மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் படையினர் தம்மை நோக்கிச் சுட்டதாகவும் — வள்ளத்தில் அதே நேரம் நின்ற மூவரும் வள்ளத்தை

[6 ஆம் பக்கம் பார்க்க]

நாளை நமக்கொரு நாடில்லையென்றால்—
நாங்கள் ஒதுங்கிட நிழல் ஏது?
வேளை உனக்கிது விரைந்து எழுந்திடு,
விடுதலை காணப் போரிடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த சில வாரங்களில் யுத்தம் முடிவுக்கு வரும்

## அமைச்சர் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 27

வடக்கில் அடுத்த சில வாரங்களில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம் என அரச நம்பிக்கை கொண்டுள்ளது.

— பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த தேசிய பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி நாட்டில் இனக்கலவரத்தை தூண்ட முயற்சிக்கின்றனர்.

வடக்கில் இராணுவம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இனவன் செயல்கள் தடையாக இருக்கும்.

எனவே மக்கள் முன்னரிலும் பார்க்க மேலும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு சிவில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உள்துறைப் பாதுகாப்புக் குழுக்களை அமைக்குமாறு சகல அமைப்புக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது — என்று அனுருத்த தெரிவித்தார்.

(ஐ)

# கந்தர் மடத்தில் தேசிய பாதுகாப்பு நிதி

யாழ்ப்பாணம், ஒக். 27

கந்தர்மடம் ஜே/104, ஜே/105, ஜே/102 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய தேசிய பாதுகாப்பு நிதியை இன்று 27 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு குளப்பிட்டிச் சந்தி செயலகத்தில் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

### தங்கமாகவும் செலுத்தலாம்

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிக்க ஒப்புதலளித்துள்ளவர்களில் பவுண் நகை அடிப்படையில் நிதிப் பங்களிப்பினைச் செலுத்த விரும்புவர்கள் ஆலோசனைகளுக்காக குளப்பிட்டிச் சந்தி தொடர்பகத்தில் நாளை 28 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

(இ)

# கியூபெக்கில் சர்வஜன வாக்கெடுப்பு

ஒட்டாவா, ஒக். 27

கனடாவிலிருந்து பிரிவதா அல்லது இல்லையா என்ற பிரச்சினையை ஒட்டிய சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த வாரம் கியூபெக் மாகாணத்தில் நடைபெறவுள்ளது.

பிரெஞ்சு இனத்தவர் பெரும்பான்மையாக வாழும் கியூபெக் மாகாணத்தவர் பிரிவுக்கு ஆதரவாகவே உள்ளனர் என்று கருத்துக் கணிப்பீடுகள் காட்டியுள்ளன

(ஏ)


## பிரம்பு வேலை தெரிந்தவரா நீங்கள்..!

பிரம்பைப் பயன்படுத்திக் கூடைகளை முடையும் அல்லது தளபாடங்களை உருவாக்கும் திறமை கொண்டவராக நீங்கள் இருந்தால் உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்புக் காத்திருக்கின்றது.

✶ எம்முடன் தொடர்புகொண்டால் நிரந்தர வேலை வாய்ப்புக்கு ஒழுங்கு செய்யப்படும்.

31 - 10 - 95 இற்கு முன்னதாக வேலை நாட்களில் காலை 10 மணிக்கும் 2-00 மணிக்கும் இடையில் நேரில் வரும்படி உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
யுனிரெக் பொறியியல் நிறுவனம்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/2535]


# மரண அறிவித்தல்கள்

## காசிநாதர் பார்வதிப்பிள்ளை

மந்துவில் கொடிகாமத்தைச் சேர்ந்த காசிநாதர் பார்வதிப்பிள்ளை 26-10-95 அன்று காலமானார்.

இவர் இராமு காசிநாதர் அவர்களின் மனைவியும், பஞ்ஞாமிர்தம், சிவராஜசிங்கம், மதுரமணி, தவமணி, யோகமணி, விஜயராசசிங்கம், தவதேவராணி, குலதேவராணி, விமலராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபாபதி, ஞானேஸ்வரி, சுப்பிரமணியம், கந்தசாமி, வன்னியசிங்கம், சந்திரபோஸ், பத்மராணி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், பிரபாகரன், தவக்குமார், தவராஜி, தவச்செல்வி, சிவஞானவதனி (லண்டன்), சிவஞானவதனா (யாழ். பல்கலைக்கழக, வர்த்தகபீட மாணவி), சந்தவநேசவி (ஆசிரியர்), சந்தவமதன், மதனிகா, சுதர்ஜினி, சுஜித்தா, சுபசோதினி, ஸ்ரீ தர்ஷினி, நிரோஜினி, வினோஜினி, விஜேஜன், பவானி, தயாநிதி, தேசநேசன், அம்பிகை வதனி, முகிதாஜீஸ்வரி ஆகியோரின் பேர்த்தியாரும், காலஞ்சென்ற நமசிவாயம், சுந்தையா, சிதம்பரம் ஆகியோரின் சகோதரியும், ஆச்சிமுத்து, காலஞ்சென்ற அப்புத்துரை, சின்னாச்சி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-10-95 வியாழக்கிழமை நடைபெற்றன

தகவல்:
தவநேசன் (பேரன்)

மந்துவில்,
கொடிகாமம்.

(8668)

## விசுவலிங்கம் முத்துவேலு

[முன்னாள் பிரதம கணக்காளர், காணி, காணி அபிவிருத்தி அமைச்சு]

ஊரெழு மேற்கைச் சேர்ந்தவரும் 46, குமாரசுவாமி வீதி, திருநெல்வேலி தெற்கில் (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக) தற்காலிகமாக வசித்தவருமான விசுவலிங்கம் முத்துவேலு அவர்கள் 26-10-95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் இலக்சுமிப்பிள்ளை தம்பதியின் இளையமகனும் காலஞ்சென்ற குமாரவேலு (மலேசியா), திருமதி சேதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், திருமதி கு. சிவக்கொழுந்து, திரு இ பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும், திருமதி கௌரி பத்மநாதன், திரு பொ. ஜெயபாலன், திரு பொ. ரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் தாய் மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 26-10-95 வியாழனன்று நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பொன்னுத்துரை
(மைத்துனர்)

46, குமாரசுவாமி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

[89162]

## கே. எஸ். நாகலிங்கம்

(நகை வியாபாரி)

காரைநகர் மொந்தபுலத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும் 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய K. S. நாகலிங்கம் 26-10-95 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வள்ளியம்மையின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் (கனகமுத்து) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா, K.S. நடராசா, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், குணபாலன் (இலங்கை வங்கி மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்), சிவபாலன், வசந்தகோகிலம், வசந்தகுமாரி (கனடா), தேவபாலன் ஆகியோரின் அன்புத் தப்பனாரும், நித்தியகலா, சுந்தமலர் (குஞ்சு), வசந்தன் (Hayles Ltd), பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, வக்ஸன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-10-95) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. குணபாலன்
(மகன்)
(இலங்கை வங்கி)

192, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(39166)


## விரைவில் ஆரம்பமாகின்றது

யாழ் நகரில் தனித்துவமான ஒரு சேவை

# யுனிரெக் ஏல விற்பனைச் சேவை

பிரதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணியிலிருந்து செயற்படும்.

✶ ஏல விற்பனையில் பொருள்களை விற்க விரும்புவோர் பொருள்களை காட்சிக்கு வைக்க இட வசதிகள்

✶ அநுபவமிக்க ஏல விற்பனையாளரின் சேவை உங்களுக்கு

✶ ஏலத்தில் எடுத்த பொருள்களை உடனடியாகப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

✶ நேரடி விற்பனையும் ஒழுங்கு செய்யப்படும், பொருள்களை விற்க விரும்புவோர் எம்மோடு உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

விற்பவர் அனைவரும் வருக!

வாங்குபவர் அனைவரும் வருக!

யுனிரெக் ஏல விற்பனை சேவை,
யுனிரெக் பொறியியல் நிறுவனம்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்.

(சி/2536)


## வளர்ப்பு மீன் விற்பனைக்கு

வளர்ப்பு கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு

ஐ அருளானந்தம்,
(குட்டி)
17, ராஜேஸ்வரி வீதி,
அரியாலை.

(39161)

## நீங்கா நினைவுகளில் முதலாம் வருடம்



உதயம்: 09 – 09 – 1920

உதிர்வு: 27 – 10 – 1994

அமரர்

### அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை

(ஐயாத்துரை)

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

இவர் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/2537)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## இசைமாணி / நாட்டியமாணி, இசைக்கலைமணி / நாட்டியக்கலைமணி 1994 / 95

மேற்குறித்த கற்கை நெறிகளுக்கான அனுமதிச் செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் 03 - 11 - 95 விருந்து 13-11-95 வரை யாழ். பல்கலைக்கழக கலையரங்கில் நடைபெறவுள்ளன தகுதியுடைய மாணவருக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். பல்கலைக்கழக தேர்வுகள் அனுமதிகள் பிரதிப்பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1995-10-20.

(சி-2533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல பிள்ளைகளுக்கும் வழங்கப்படவுள்ள

# போலியோ மருந்துத் தொகுதி வந்தது;

# ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன

யாழ்ப்பாணம், ஒக். 27

எதிர்வரும் நவம்பர் 4ஆம், 9ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய நோய்த் தடுப்பு தினங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் வழங்கப்படவுள்ள போலியோ தடுப்பு மருந்துத் தொகுதி முழுவதுமாக இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

2 லட்சத்து 20 ஆயிரத்து 210 பிள்ளைகளுக்கு வாய் மூலம் வழங்கக் கூடிய இந்த தடுப்பு மருந்துத் தொகுதி ''ஹபரண'' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது.

போலியோவை (இளம் பிள்ளைவாதத்தை) இரண்டாயிரமாம் ஆண்டுக்கு முன்னராக உலகில் இருந்து ஒழித்துக் கட்டுவது என்ற சர்வதேச றோட்டறியின் திட்டத்தின் கீழ் ஒரே நாளில் ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ மருந்து வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்தை எதிர்வரும் 4ஆம் திகதி வெற்றிகரமாக நடத்தி முடிக்க துரித ஏற்பாடுகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 4ஆம் திகதி முதற்கட்டமாகவும், 9ஆம் திகதி இரண்டாவது கட்டமாகவும் போலியோ மருந்து பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

இரண்டு தடவைகளிலும் இந்த தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியது மிகக் கட்டாயமானதாகும்.

[ஐ-4]

# இராணுவ வாகனம் திடீரென மறைவு!

## பேலியகொடையில் பதற்றம்

கொழும்பு. ஒக். 27

கொழும்பு பேலியகொடையில் உள்ள மின் விநியோக நிலையத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று நேற்று முன்தினம் திடீரெனக் காணாமற் போனதை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இனந்தெரியாதவர்களால் அது கடத்தப்பட்டுவிட்டதாக முதலில் செய்தி பரவியதும் அப்பகுதியைச் சேர்ந்தோர் பெரும் பீதியடைந்தனர்.

கடத்தப்பட்டதாகக் கருதப்பட்ட அந்த இராணுவ வாகனம் பின்னர் விமான நிலையம் செல்லும் பாதையில் கண்டு பிடிக்கப்பட்டது. மற்றொரு இராணுவ அதிகாரி எவருக்கும் சொல்லாமல் அதை எடுத்துச் சென்றது பின்னர் தெரிய வந்தது.

[ஐ]

# ஐ. நா. அதிகாரிகள் இங்கு வருவதற்கு அரசு தடை?

யாழ்ப்பாணம், ஒக். 27

ஐ. நா. அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு வருவதற்கு அரசு தடை விதித்துள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியான றோலண்ட் ஹட்சன் குடாநாட்டு மக்களின் அவலங்களையும், உணவுப்பற்றாக்குறை நிலையையும் விளக்கி விவரமான அறிக்கை ஒன்றை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகத்துக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையால் அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையை அடுத்து அந்த அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ். வர அரசு தடை விதித்துள்ளதாக மேலும் தெரிய வந்தது.

(ஒ-3)

# வலி. மேற்கு பகுதியில் வழமை நிலை திரும்புகிறது

## மக்கள் சென்று குடியேறுகின்றனர்

யாழ்ப்பாணம் ஒக். 27

வலிகாமம் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது அங்கு நிலவும் சுமுகநிலை காரணமாக அப்பகுதிகளில் மீண்டும் குடியேறிவருகின்றனர்.

பொன்னாலை, மூளாய், சுழிபுரம், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தன்கேணி, சங்கானைப பகுதிகளில் மக்கள் குடியேறி வழமை போல இயங்கிவருகின்றனர்.

வலிகாமம் கிழக்கில் தற்போது இடம்பெற்று வரும் இராணுவநடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு அப்பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் பலரும் வலிகாமம் மேற்கு பகுதிகளை நாடிவருகின்றனர்.

வலி. மேற்குப குதிகளில் இருந்து வெளியேறி வன்னிப் பகுதியை நோக்கிச் சென்ற பலரின் வீடுகளில், வலிகாமம் கிழக்கில் இருந்து வெளியேறிய மக்கள் பலர் இடம் பிடித்து வருகின்றனர்.

அப்பகுதிகளில் தற்போது சேதமடைந்தவை தவிர மக்கள் இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லுமளவிற்கு மக்கள் குடியேறியுள்ளனர்.

வலி-மேற்கு பகுதி கிராமங்கள் தற்போது வழமை நிலைக்கு திரும்பியுள்ளன.

(இ-15)

# தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

சண்டிலிப்பாய் வட்டத்தில் இதுவரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காத மக்களுக்கான கலந்துரையாடல் பின்வரும் இடங்களில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

★ சுதுமலை வடக்கு:- நாமகள் ச. ச. நிலையம் — காலை 8.30 — 1 மணி வரை.

★ சுதுமலை தெற்கு:- சுதுமலை மத்தி ச. ச. நிலையம் பிற்பகல் 1 மணி — 5 மணி வரை—

★ ★ ★

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள பின்வரும் கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கிராமசேவை அலுவலர் பிரிவுகளின் விபரம் வருமாறு:- அல்வாய் மேற்கு [ஜே—396], அல்வாய் வடமேற்கு (ஜே—397), அல்வாய் வடமத்தி [ஜே—398], வியாபாரிமூலை [ஜே—399], அல்வாய் வடக்கு (ஜே—400), பருத்தித்துறை [ஜே—401], பருத்தித்துறை தெற்கு (ஜே—402) பருத்தித்துறை கிழக்கு (ஜே—403), தும்பளை [ஜே—404], தும்பளை கிழக்கு [ஜே— 405], சுற்கோவளம் [ஜே — 406] புலோலி வடக்கு (ஜே — 407), புலோலி வடகிழக்கு [ஜே — 408], புலோலி மத்தி (ஜே —409], புலோலி மேற்கு (ஜே —410), புலோலி தென்மேற்கு [ஜே—411), புலோலி வட மேற்கு (ஜே — 412], புலோலி கிழக்கு [ஜே—413], புலோலி தெற்கு (ஜே — 414), மந்திகை ஜே—415), வல்லிபுரம் (ஜே—416), துன்னாலை வடக்கு ஜே — 417]

[எ]

# இன்றும் நாளையும் நிதி செலுத்தும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரியாலை ஜே—92, ஜே—93, ஜே—94, ஜே—95, ஜே—96, ஆகிய கிராம சேவை அலுவலர் 4 பிரிவுகளைச் சேர்ந்தோர் இன்று வெள்ளி பிற்பகல் 2.30 மணி முதல் 5-30 மணி வரை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தமது தேசிய பாதுகாப்பு நிதியைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

தேசிய பாதுகாப்பு நிதி வழங்குவதாக ஒப்புதல் அளித்து இதுவரை அதனை செலுத்தத் தவறிய— புலோலி மத்தி (ஜே—409), புலோலி மேற்கு (ஜே—410), புலோலி தென்மேற்கு [ஜே—411), புலோலி வட மேற்கு (ஜே—412' ஆகிய பிரிவுகளை சேர்ந்தோர்—

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# தென்னாபிரிக்காவிலும் தமிழர் ஆதரவுப் பேரணி

## மண்டேலாவும் பங்கு பற்றுவார்

லண்டன், ஒக். 27

இலங்கைத் தமிழரின் போராட்டத்தை ஆதரித்தும் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் 26 ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப் பேரணியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவும் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் உள்ள தமிழர்கள் இப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர் என்று திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியின் போது தகவல் வெளியிட்டார்.

(ஒ-3)

# திரளும் கருமேகங்களால் அமில மழை பெய்யலாம்

## காலநிலை அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27

கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் எரிந்ததால் வானத்தில் திரண்டு காணப்படும் கறுப்பு நிற மேகங்கள் அமில மழை பொழிவதற்கு வழி வகுக்கக் கூடும்.

காலநிலை அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டதாக ஆங்கிலவார இதழ் ஒன்று குறிப்பிட்டது.

மிகத் தாழ்வாக — ஐயாயிரம் அடி உயரத்தில் — பத்து கடல் மைல் வேகத்தில் வீசும் காற்றினால் —

கொலன்னாவை தீச் சுவாலைகளில் இருந்து எழும்பும் கரும்புகை மண்டலம் வலிகாவிலிகுடாவை நோக்கி நகர்கின்றது.

இந்தக் கரும்புகை மண்டலம் அமில மழையாகப் பொழிவது மேகங்கள் திரள்வதிலும், கொலன்னாவையில் எரியும் ஏனைய பதார்த்தங்களிலும் தங்கியிருப்பதாக காலநிலை அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

(உ)

# இன்றும்... இன்னும்... இப்படியும்...

சேடமிழுத்த பூமரங்களெல்லாம்
பருவ அழகோடு உருமாறிக் கொண்டன.
அடிவேரில் நீர்பட்டு
அலரிமரத்திலும் ஆயிரம் மொட்டுக்கள்
தேடுவாரற்றுக்கிடந்த காட்டாமணக்கிற்கூட
ஒரு தேஜஸ்.
வெளியே மழைபொழியும் காலம் வந்தாச்சு.
இனிப்போர்வைக்குள்போய்
தூங்கி மகிழலாம்.
கூரையில் விழும் சாரல் மழையின் சங்கீதத்தில்
எத்தனை கோடி இன்பம்.
சாளரங்கள் பூட்டி
நுளம்புத்திரி மூட்டி
ஆனந்த சயனம்; அற்புத சுகம்
தமிழா! உனக்கென்ன கவலை?
எந்த இன்னலுமற்ற இருப்பு
அச்சமில்லாத வாழ்வு.
அசதியில்லாத நித்திரை.
அதுபோதும்; புகுந்த விளைபாடு
வெளியே வந்துவிடாதே
தூறல்பட்டு நெஞ்சிற் சளி பிடித்துவிடும்.
கூட்டுக் குள்ளேயே குறட்டைவிடு.
இருமியபடியே எறிகணைகள் வரலாம்
எப்பன் அரக்கிப்படு.
ஆ... மெல்ல அரக்கு; மேனியிலே நோப்படும்
பலாலி நெருப்புப் பரவி; நிலாவரை கடந்து
நீர்வேலிக்கும் வந்து விட்டதாம்.
அதை நினைத்து அஞ்சாதே.
''பொடியள்'' இருக்கிறாங்கள் பார்த்துக்கொள்ளட்டும்.
''அவங்கள் கெட்டிக் காரங்கள்''
செத்தாலும் விடமாட்டாங்கள்
நீ நித்திரைக்குப் போய் நிம்மதியாய்த் தூங்கு.
மூத்தவன் வீடுவந்து விட்டானா?
மூதேசியை ஊர்மேய விடக்கூடாது.
மழைபட்டுத் தடிமன் வந்தால்
நியூசன் பாழாகிவிடும்.
வந்ததும் தலைபுலர்த்திச் சாம்பிராணி காட்டு
மகளெங்கே?
வீட்டுக்குள்ளே பாட்டுக் கேட்கின்றாளா?
நல்லது.
கவனம்; காலம் கெட்டுக் கிடக்கிறது.
கடைசிப் பொடியனுக்கு எத்தனை வயது?
பதினெட்டா? பவுத்திரம்.
இயக்கத்துக்குப் போகும் எண்ணம் வரலாம்
கண்ணுக்கு எண்ணையூற்றியபடி காவலிரு.
எல்லாம் நல்லபடியே நடக்கும்
வீட்டைப் பூட்டி நாயை அவிழ்த்து விடு.
கிணற்றடி இதரை வாழையில்
இடைப்பழம் பழுத்துளது.
கள்ளர் உலாவுவதாகக் கதையுண்டு
காயப்பட்ட ''பொடியனை'' ஏற்றி வரும் போது
மினிபஸ்சுக்குக் காற்றுப் போகலாம்.
ஓடிவந்து எங்கடை 'ஏஸ்போட்டியை' க் கேட்பாங்கள்
பிறகெல்லாம் கரைச்சலப்பா
கழுவியெடுக்க மூன்று நாள் வேண்டும்.
வெலிக்கேற்றையும் பூட்டும்.
''பொடியள் விடமாட்டாங்கள்
ஆமிக்காரனென்ன மயிரைப் புடுங்கிறதே.''

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய முதிரைக் கதவுகள் 3 சோடி விற்பனைக்குண்டு. 6x3 அளவுடையவை. இல. 861, மே/பா உதயன். (39146)

### தேவை

யாழ். நகர சுற்றாடலில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு இரு அறைகள் கொண்ட பகுதி வீடு தேவை. மாதம் ரூபா 1000/- வாடகை தரப்படலாம். இல. 860, மே/பா உதயன். (39145)

புதிய அல்லது பழைய தமிழ், ஆங்கில எழுத்துக்களும், பேப்பர் வெட்டும் இயந்திரமும், அச்சக பாவனைக்குரிய பொருள்களும் உடன் தேவை. தொடர்பு: வைத்தீஸ்வரா பதிப்பகம், சிவன் கோவிலடி. 370, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (8667)

### புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5ற்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 29-10-95 ஞாயிறு முற்பகல் 8-00 மணிக்கு நடைபெறும். ஆண்டு 3, 4இற்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 29 - 10 - 95 பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். விரைந்தால் தேவையானோர் தொடர்புகொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (39155)

### தவறிவிட்டது

பொன்னுத்துரை சமவேஸ்வரன் எனும் பெயருடைய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். பஸ் சீட்டு அட்டை, வீட்டுத் திறப்புகள் அடங்கிய பையை ஒன்று கைதடிச் சந்திக்கு அண்மையில் 25-10-95இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: எஸ். பரமேஸ்வரி, 37, புவனேஸ்வரி, அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (39143)

## ஆனையிறவு படையினர் ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஒக். 27

தீபாவளி தினமான திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் வடமராட்சிகிழக்கு வெற்றிலைக்கேணி முகாமிலிருந்தும் ஆனையிறவு முகாமிலிருந்தும் வடமராட்சி கிழக்கு, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணிப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல்வீச்சு நடத்தப்பட்டது.

ஷெல்கள் வயல்களிலும், வெளியான பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் மருதங்கேணி கடற்கரையில் வீழ்ந்து வெடித்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஓ-117)

## தமிழ்ப் பெண்கள் இருவர் கைது

கொழும்பு, ஒக். 27

களனிப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் வைத்து வடபகுதியைச் சேர்ந்த இரு தமிழ்ப் பெண்களை பேலியகொடை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் நல்லூரைச் சேர்ந்த ஆசிரியை என்றும் மற்றவர் வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 8 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

### நெஞ்சம் மறப்பதில்லை

தோற்றம்: 22 — 05 — 1926



அமரர் ஜனனம் / அமைதி: 27 — 10 — 1987

### அமரர் த. தருமலிங்கம்

(யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை ஓய்வுபெற்ற அதிபர்)

அன்பின் திருவுருவே ஆண்மையின் சிகரமே
கண்கண்ட தெய்வமே கருணையின் இருப்பிடமே
அறிவின் ஆழ்கடலே அதிபர்குல தெய்வமே
தருமத்தின் காவலனே தருமபகவானே நின்
ஆளுமையின் தோற்றமும் அருள் ஒழுகும் நயனங்களும்
அழகொழுகும் வதனமும் அமுதூறும் சொற்களும்
செங்காந்தள் கரங்களும் செம்மையான எழில்நடையும்
எட்டாண்டல்ல எண்ணாயிரம் ஆண்டென்றாலும்
நெஞ்சம் மறப்பதில்லை நீண்டதுயர் போவதில்லை
என்னாகி விட்டதையா எட்டாண்டும் என் உடலம்
கனவிலும் காணுதையா நின் எழிலின் தோற்றமது
தாய்பசி தீர்த்தே தயங்காமல் வருவேனென்றீர்
தாய்பசி தீர்க்கவில்லை தன் இல்லமதும் செல்லவில்லை
அழுத கண்ணீர் துடைத்து ஆற்றாது சென்றீரே
கோரக் கொலை என்று கொண்டு வந்தோர்
சொன்னார்கள்
கதறினேன் கத்தினேன் கதைதானும் சொல்லவில்லை
தருமரே வாருமென்று தருமபகவான் தான்
அழைத்தானோ?
சூரசங்காரஞ் செய்யச் சிறந்ததுணை வேண்டுமென்று
முருகனே முன்னின்று முதல்நாளே அழைத்தானோ?
என் நிலை அறியாது என் இதயம் வேகவைத்து
கண்மணிபோல் வளர்த்திட்ட கன்னனைக்கலங்கவிட்டு
பிரிந்தீரே எமை விட்டுப் பிரியாவிடை சொல்லவில்லை
சேவைக்கே பிறந்தீர் சேவைதனை முடித்துவிட்டீர்
கடமைதனை எனக்களித்துக் கண்ணியமாய்ச்சென்றீரே
ஒக்டோபர் [27] இருபத்தேழே ஒளியிழக்க வைத்தாய்
என் வாழ்வை
உன்னை நினைக்க உள்ளமெலாம் சோருதே ஆவியுடன்
காலனவன் கொடுமையினைக் காட்டிவிட்டான்
உன்னாளில்
இறைவன் அரவணைப்பில் இன்பமுடன் இருக்கவென்று
இறைவனின் இன்னருளை இதமுடன் வேண்டி நிதம்
சாந்தியடைக வென்று சந்ததமும் வேண்டுகிறோம்
கண்ணீரால்.

தங்கள் பிரிவால் வாடி வதங்கும்;

ஆருயிர் அன்பு மனைவி
திருமதி க. தருமலிங்கம்
மகன், மருமகள், பேரர்
உற்றார், உறவினர்.

தருமபதி,
57, கே. கே. எஸ். றோட்,
கொக்குவில். [39139]



உ
விநாயகர் துணை

## புதுக்கடை திறப்பு விழா

நிகழும் யுவ வருடம் 10 ஆம் நாள் (27 - 10 - 1995) வெள்ளிக்கிழமை காலை 9-34 மணிமுதல் 10-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளை மின்சாரநிலைய வீதி, 213 ஆம் இலக்கக் கட்டடத்தில்

### "ரி. அன். கே. வர்த்தக நிறுவனம்"

வியாபார நிறுவனத்தை ஆரம்பிக்க திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் எமது வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரையும் சமூகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T. தில்லைநாதன்
S. T. K. கிருபானந்தன்

(39157)

## கண்ணீர் அஞ்சலி

26 - 10 - 95 வியாழக்கிழமை காலை நடைபெற்ற விமானக் குண்டு வீச்சினால் அகால மரணமடைந்த எமது பாடசாலை மாணவர்களான—

**செல்வராசா சதீஸ்குமார்** [ஆண்டு 9]
**செல்வராசா தேவச்செல்வம்** [ஆண்டு 5]

ஆகியோருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை,
யாழ்ப்பாணம்.

[39156]

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 23 — 05 — 1901



இறப்பு: 27 — 10 — 1985

### மத்தியாஸ் இராயப்பு

எம் குலத்தின் குலவிளக்கே
அப்பையா நீங்கள் சென்று
10 வருடங்கள் ஆனாலும் உங்கள்
நினைவு என்றும் எம்மை விட்டு மறையாது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

மகன், மகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தாளையடி [39154]

## சுழிபுரம் பறாளையில் இன்று (27-10-95)

# ஈசுரவிநாயகருக்குக் கலசாபிஷேகம் (பி.ப. 2மணி)

தமிழீழ மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இந்திய (தமிழக) அறிவாளிக் குழுவின் பலம் மத்திய அரசின் மீது செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு மேலோங்க இன்றைய கலசக்காவடிகளின் கலசாபிஷேகம் பலன் அளிப்பதாக.

(39158) -சோழியூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனைத் தேடிச் சென்றபோது முதலில் தலையையே கண்டேன்

## இரு பிள்ளைகளைப் பலி கொடுத்த தாயார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பின்னர் பிள்ளைகளைத் தேடிச் சென்றேன். தலை ஒன்று கிடந்தது. எனது பிள்ளையின் தலை என்று தெரியாது அப்பால் சென்றபோது 20 யார் தூரத்தில் மகனின் தலையற்ற சடலம் கிடந்தது. உடுப்புகளைக் கொண்டு எனது மகன் என்று அடையாளம் கண்டுகொண்டேன்.

நேற்று அரியாலை நாவலடியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் தமது இரு பிள்ளைகளை இழந்த மகேஸ்வரி என்ற பெண் மேற்கண்டவாறு கூறினார்.

அவரும் இச்சம்பவத்தில் காயமடைந்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலை பாணுக்கு அனுப்பிய மகன் பாணில்லை எனத் திரும்பி வந்தார். பின்னர் சகோதரி வீட்டுக்கு உப்பு வாங்கிவரச் சென்றார்.

உப்பு வாங்கச் சென்றவர் உப்புடன் திரும்பி வந்து, சகோதரி கொடுத்த இரண்டு றாத்தல் பாணையும் என்னிடம் தந்துவிட்டு முகம் கழுவ கிணற்றடிக்குச் சென்றார்.

நான் பின்னர் தேநீர் வைத்துக்கொண்டிருந்தேன். அப்போது விமானச் சத்தம் கேட்டது. வெளியே வந்தபோது குண்டு ஒன்று வெடித்தது.

அவ்வேளை எனது மற்றைய மகனுடன் கீழேவிழுந்து படுத்துக்கொண்டேன்.

பின்னர் எழுந்து கிணற்றடிக்குச் சென்ற மகனைத் தேடினேன். இரண்டாவது குண்டும் வீசப்பட்டது.

படலையைத் திறந்தபோது படலைக்கு வெளியே தலை ஒன்று காணப்பட்டது. தலையைக் கண்டும் யாரோஎவரோ என எண்ணி எனது மகனைத் தேடி ஓடினேன். 20 யார் தள்ளி தலையில்லாத சடலம் ஒன்று காணப்பட்டது. உடுப்பைக்கொண்டு அவர் எனது மகன் என்று அடையாளம் கண்டேன். அதுவும் முதலாவது குண்டின்போது என்னுடன் படுத்துத்தப்பிய மகனே இரண்டாவது குண்டில் சிக்கி இருந்தார்.

பின்னர் முகம் கழுவ கிணற்றடிக்குச் சென்ற மகனைத் தேடி ஓடிய சமயம் அங்கே அவர் கிணற்றடியில் வயிறு பிளந்த நிலையில் காணப்பட்டார். அருகில் வேறு சடலங்களும் இரத்த வெள்ளத்தில் கிடந்தன.

இப்படி அவர் கூறினார்.

இந்த சம்பவத்தில் இறந்த இரு சகோதரர்களும் செல்வராசா சதீஸ்குமார், செல்வராசா தேவச்செல்வம் ஆவர். (இ-15)

## காயமடைந்த 9 பேர்

நேற்றைய விமானக் குண்டு வீச்சில் காயமடைந்தோர் விவரம்:-

இணுவிலைச் சேர்ந்தவர்களான—

★ நடேசபிள்ளை அன்பழகன் (வயது 23)

★ நற்குணம் நக்கீரன் (வயது 20)

★ நடராசா துஷ்யந்தன் (வயது 16)

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த—

★ இராசேந்திரகுமார் ரஜனி (வயது 26). இவர் கணவன் இச்சம்பவத்தில் உயிரிழந்துவிட்டார். தனக்குக் கீழ் தன் ஒரேமகனைப் படுக்க வைத்துக் காயம் எதுவுமின்றிக் காப்பாற்றிக் கொண்டார்.

கோப்பாயைச் சேர்ந்த—

★ கனகராசா அஜந்தா (வயது 21)

★ இவரது சகோதரி கனகராசா அனுஷா (வயது 15)

அரியாலை நாவலடியைச் சேர்ந்தவர்களான—

★ பொன்னுத்துரை பார்த்திபன் (வயது 10)

★ செல்வராசா மகேஸ்வரி (வயது 45) இவரது இரண்டு பிள்ளைகளும் இச்சம்பவத்தில் பலியாகினர். அவர்களில் ஒருவரின் தலை துண்டாடப்பட்டது.

★ இராசையா ரஜீந்திரன் (வயது 20) சிவத் தொழிலாளியான இவர் மரத்தில் இருந்தவேளை காயமடைந்தார்.

(ஒ-15-13-4)

# ஷெல், விமானக் குண்டுக்குப் பயந்து இடம்பெயர்ந்தோரே பலியாகினர்

அரியாலை நாவலடியில் நேற்று இடம்பெற்ற குண்டு வீச்சில் உயிரிழந்தும், காயமடைந்துமுள்ளவர்களில் பெரும்பாலானோர் வேறு இடங்களில் இருந்து வந்து உறவினர்களின் வீடுகளில் தங்கி இருந்தோரே.

இவர்களில் அனேகமானோர் விமான, மற்றும் ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி இணுவில், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள்.

தமது பகுதியில் நிலைமை ஓரளவு சீரடைந்ததைத் தொடர்ந்து தமது சொந்த இடங்களுக்குச்செல்ல ஆயத்தமானவேளையே இவர்களுக்கு இந்த உயிராபத்து நிகழ்ந்துள்ளது.

அகதிகளாக இருந்தவர்களில் சுமார் அரைவாசிப் பேர் முதல்நாள் இரவு தம் சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பி இருந்தனர். ஏனையோர் நேற்றுக் காலை தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்ல இருந்தனர்.

(இ-15)

# யாழ்ப்பாணம் எடுத்துவர ஏற்றப்பட்ட ம.எண்ணெய்யை இறக்கப் பணிப்பு

வடக்கே எடுத்து வருவதற்காக "மாஹோ" கப்பலில் ஏற்றப்பட்ட மண்எண்ணெய்யை இறக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

யாழ் மாவட்ட மக்களுக்கு தேவையான 6 ஆயிரத்து 900 பரல் மண்எண்ணெயில் 3ஆயிரத்து 185 பரல் மண்எண்ணெய் "மாஹோ" கப்பலில் இம்மாதம் பத்தாம் திகதி ஏற்றப்பட்டிருந்தது.

இக்கப்பலில் உரம் ஏற்றுவதில் ஏற்பட்ட தடையால் கப்பல்கொழும்புத்துறைமுகத்தில் மண்எண்ணெய்யுடன் கடந்த இரண்டு வாரங்களாக தரித்து நின்றது.

கொழும்பில் தங்கி நிற்கும் யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலத்துக்கு மண்எண்ணெய்யை இறக்குமாறு பாதுகாப்பு அமைச்சு இம்மாதம் 21 ஆம் திகதி பணிப்புரை விடுத்திருந்தது.

மண்எண்ணெய்க்குப் பதிலாக ஆயிரம் மெற்றிக்தொன் உரத்தை ஏற்றிச் செல்லுமாறும் பாதுகாப்பு அமைச்சு யாழ். அரச அதிபரை அறிவுறுத்தியது.

குடாநாட்டுக்கு மண்எண்ணெய் அவசரம் தேவையாகையால்கப்பலில் ஏற்றிய மண்எண்ணெய்யை எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு கோரி யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் —

இக்கடிதத்துக்கு நேற்றுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் —கொழும்புத்தகவல் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை — கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு மாதாந்த கோட்டா மண்எண்ணெய்யை ஏற்றிவந்த லொறிகளும்வவுனியாவில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

(இ-3)

## மா இன்றி ஹபரண

யாழ்ப்பாணம், ஒக். 27

திருகோணமலையில் இருந்து "ஹபரண" கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்துசேரும். ஆனால் திட்டமிட்டபடி மா எடுத்துவரப்படமாட்டாது.

மேற்கண்ட தகவல் நேற்று யாழ்ப்பாணத்துக்கு கிடைத்தது.

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மா எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு கிடைத்த தகவலின்படி —

இக்கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் —

கப்பலில் மா ஏற்றிவரப்படமாட்டாது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் மா எடுத்து வராமைக்கான காரணம் இங்கு அறிவிக்கப்படாத போதும் —

கப்பலில் மா எடுத்து வருவதற்கான கட்டளை கொழும்பில் இருந்து தாமதமாகவே திருகோணமலைக்கு கிடைத்ததாகவும் —

அதனால் மா ஏற்றிவரப்படவில்லை என்றும் —

மீண்டும் இக்கப்பல் அடுத்த மாதம் 8 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும்போது மா ஏற்றிவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நேற்று மாலை கொழும்பில் இருந்து வந்த தகவல் ஒன்று தெரிவித்தது.

[இ-3]

## 2 போராளிகள் 2 ஆதரவாளர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 27

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு சந்திவெளியில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த நேரடி மோதலில் 2 போராளிகளும் முழுநேர ஆதரவாளர்கள் இருவரும் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் ஜெகபரன் அல்லது ஜெகன் (கேசவன்) குகதாஸன் —மட்டக்களப்பு, கப்டன் அன்ரன் அல்லது பவளசிங்கன் (குமாரசாமி லோகிதராஜா) மட்டக்களப்பு ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர். (ஒ-3)

## கொழும்பில் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, ஒக் 27

கொலன்னாவ எண்ணெய்க்குத தாக்குதலை அடுத்து ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப் பாட்டால் கொழும்பில் போக்கு வரத்து பாதிக்கப் பட்டுள்ளது.

தனியார் வாகனங்கள் குறைவாக சேவையில் ஈடுபட்டுள்ளதால், பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிவருகின்றனர். (ஒ-3)

## சுப்பசொனிக்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேர் பலியானார்கள். இவர்களில் பலரது உடல்கள் சிதைந்து சின்னாபின்னமாகி இருந்தன. அதிகமானோரின் உடல்கள் அவயவங்கள் குண்டு வீச்சில் சிதறி கோரமாகக் காணப்பட்டன. அந்தப்பகுதி இரத்தக் காடாகக் காட்சியளித்தது.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை அப்பகுதியில் இருந்து அகற்றிய பின்னரும் அங்கு சதைத்துண்டங்கள் சிதறிக் கிடந்தன. மரங்களிலும் உடல் சிதைவுகளும், உடைகளின் கிழிசல்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

சிலரின் உடல் அவயவங்கள் தொலைவில் இருந்தும் மீட்கப்பட்டன. கை, கால்கள் தூக்கி எறியப்பட்டிருந்தன

மீட்கப்பட்ட கை கால்கள் மற்றும் சதைச் சிதைவுகள் கோழிக் கரப்பு ஒன்றுக்குள் அள்ளிப்போடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

பலியானவர்களில் பலரும் கடந்த இரண்டொரு வாரங்களுக்கு முன் கொக்குவில், கோண்டாவில், இணுவில் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் ஆவர்.

குண்டு வீச்சில் கால்நடைகள் பலவும் இறந்துவிட்டன. தென்னை மரங்கள் பல துண்டுகள் போடப்பட்டது போன்று காணப்பட்டன

(ஒ-3-4 .13-15)

---

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## உணர்த்துவது யார்?

வடக்கு- கிழக்கில் சந்திரிகா அரசாங்கம் இப்போது நடத்தும் போரின் நோக்கம் தான் என்ன?

அரசின் உண்மையான நோக்கம் ஒன்று உண்டு. இனப்படுகொலை மூலம் தமிழர்களைப் பலவீனப்படுத்தி அவர்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யாத ஒரு தீர்வைத் திணிப்பதே அந்த நோக்கம்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைஏற்றுக்கொண்டு— அதனை அங்கீகரித்து—அவர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை கொண்டு வருவதற்கான விருப்பம், அதற்கான பலம், துணிவு என்பன சந்திரிகா அரசுக்கு அறவே இல்லை.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென்று மக்கள் வழங்கிய ஆணையை சந்திரிகா கடலுக்குள் போட்டுவிட்டார்!

முழுக்க முழுக்க இராணுவத் தீர்வையே நாடியிருக்கிறார். அதற்கான மூலோபாயங்கள் உத்திகளை வகுத்துச் செயற்படுகிறார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட இயக்கமான விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் பலவீனமாக்கித் தாம் நினைத்ததை, திட்டமிட்டதை, வகுத்ததை நடைமுறையாக்க அவருக்குப் போர் மிக மிக அவசியமாகிறது.

இந்த உண்மையை வெளியே சொல்லாமல், போருக்கான காரணத்தை நேரத்துக்கும், இடத்துக்கும் ஏற்றாற் போல, அடிக்கடி மாற்றிக் கூறி வருகிறார்.

சமாதானத்தைக் காண்பதற்காகவே போர் தொடங்கப்படுவதாகவும், அது தம் மீது திணிக்கப்பட்டுள்ளதால் அது தவிர்க்க முடியாதது ஆகிறது என்றும் சந்திரிகா ஆரம்பத்தில் சொன்னார்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்காகவே போர் நடத்தப்படுவதாகப் பின்னர் கூறினார்

இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி முடுக்கிவிட்டு, விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழர்களை விடுவிப்பதற்காகவே போர் நடத்தப்படுகிறது என்று இன்னொரு முறை சொன்னார்.

விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு எதிராக உள்ளதால் அவர்களுக்கு எதிராகவே போர் நடக்கிறது; தமிழர்களுக்கு எதிராகவல்ல என்றார் மற்றொரு தடவை.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வன்முறை உகந்ததல்ல என்று புலிகளுக்கு உணர்த்துவதற்காகவே இப்போதைய போர் நடத்தப்படுவதாக அமெரிக்காவில் நின்று இப்போது சொல்லியிருக்கிறார்!

போர் என்றால் என்ன? தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவம் நடத்தும் வன்செயல்களின் அக்கிரம வடிவமே அது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வன்முறை உகந்ததல்ல என்று புலிகளுக்கு உணர்த்த நினைத்த சந்திரிகா —

அதனைத் தாமே முதலில் உணரத்தவறியது ஏன்?

அதனை அவருக்கு உணர்த்துவதற்குஒரே வழி அவரைப் பதவியில் இருந்து இறக்குவதே...! இதனை யார் செய்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு நாட்டையும் யுத்த நிலையில் வைத்திருக்க அமைச்சரவை முடிவு

கொழும்பு, ஒக். 27

முழு நாட்டையும் யுத்த நிலையில் வைக்க நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சரான சி. வி. குணரத்தினா இது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பித்த பிரேரணை ஏற்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் குறித்து ஆராய அமைச்சரவை

## ஆராய துணைக்குழு

துணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய தும் இதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் — தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை — முழுநாட்டிலும் போர்ப்பிரகடனத்தை அரசு அறிவித்துள்ளதாகவும் சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் விரைவில் முடிந்து விடும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். (இ-3-6)

## பாதுகாப்பு குறித்து விவாதம்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு நகரின் பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நேற்று நடந்தது.

"வடக்கில் தாக்குதல் நடக்கும் இந்நேரத்தில் கொழும்பின் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும்" எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-3)

## 40 சிங்கள கிராமவாசிகள் ஆயுதபாணிகளால் கொலை

கொழும்பு, ஒக். 27

அனுராதபுரம் மாவட்டம் தம்மன்ன, கெப்பிற்றிக்கொல்லாவக் கிராமங்களுக்குள் நேற்று அதிகாலை புகுந்த ஆயுதம் தரித்தவர்கள் 40 சிங்கள கிராமவாசிகளை கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் நடந்த தாக்குதல்களில் 120 க்கும் மேற்பட்ட சிங்கள கிராமவாசிகள் கொலைப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன. (ஒ-க-3-6)

### அனுராதபுரத்தில்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயுதம்

லண்டன், ஒக் 27

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதலை அடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ஆயுதங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்தப்பகுதிக்கு கூடுதல் இராணுவம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சமரிடையில் ஈடுபட்டுள்ள படையினர் இந்த கிராமங்களைப் பாதுகாப்பதற்காக வாபஸ் பெறப்படமாட்டார்கள் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவம் யாழ்ப்பாணத்தில் முன்னேறி வருவதாகவும்—

இனித்தான் பெரியசண்டை நடைபெறவிருக்கிறது என்று மூத்த இராணுவ அதிகாரி தெரிவித்தார் என்றும் — பி. பி. ஸி தெரிவித்தது.

## உப அலுவலக கோவைகள் எடுக்க முடியாத நிலை

அச்சுவேலி ஒக். 27

அச்சுவேலி தெற்கில் செயற்பட்டுவந்த அச்சுவேலி உப அலுவலகமும், புத்தூர் சந்தியில் செயற்பட்டுவந்த புத்தூர் உப அலுவலகமும் இராணுவத்தின் கட்டுப் பாட்டுக்குள் சிக்கியுள்ளன.

இதனால் இந்த உப அலுவலகங்களிலிருந்து ஆவணங்கள், கோவைகள் உடைமைகளை வெளியே கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-11)

## பட்ஜட்டில் சிக்கன நடவடிக்கை

லண்டன், ஒக். 27

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்துகொண்டிருக்கும் போருக்கான மேலதிக பணத்தைப்பெற எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் சிக்கன நடவடிக்கை அறிமுகப்படுத்தப்படும் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன என்று பி. பி. ஸி தெரிவித்தது. (இ-3)

## இடம்பெயரும் மக்களுக்கு 4 முகாம்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27

வலி. கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்க நான்கு முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம், கைதடி சித்த மருத்துவ வளாகம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி. ஆகிய பாடசாலைகளில் முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம்களில் 300 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேர் தங்கியுள்ளனர்.

இதேவேளை— வலி- கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமைத்த உணவு வழங்கிவருகிறது. (ஒ-3-117)

## ஓய்வூதியக் கணிப்பீட்டில் புதிய நடைமுறைகள்

### ஒக் 1 முதல் அமுலில்

கொழும்பு, ஒக். 27

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள், ஆயுதப்படைகள் ஆகியனவற்றில் கடமையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கான ஓய்வூதியம், பணிக்கொடை, மரணப் பணிக்கொடை ஆகியனவற்றைக் கணிப்பது தொடர்பாக 1 - 10 - 95 முதல் புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சரின் 07 - 06 - 1995 ஆம் திகதியை 16/95 இலக்க முடைய சுற்று நிருபத்தில் புதிய நடைமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஓய்வூதியக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெறவுள்ள ஊழியர்கள் சுற்றறிக்கையின் பின்னிணைப்பாக உள்ள விண்ணப்பப்படிவம் "எ"யில் 6 பிரதிகளைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் தினத்திற்கு 3 மாதங்களுக்கு முன்னர் தனது திணைக்களத் தலைவருக்கு 5 பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும் இவ்வாறான படிவத்தின் ஒரு பிரதியை ஓய்வு பெறுபவர் நேரடியாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்

ஓய்வு பெறும் ஒருவருக்கு அவரது ஓய்வூதியம் கணிக்கப்பட்டு அவர் ஓய்வு பெறும் தினத்திற்கு முன்னர் கடித மூலம் அறிவிக்க வேண்டும். ஒரு ஊழியருக்குரிய பணிக்கொடை (Commuted Gratuity) அவர் ஓய்வுபெறும் தினத்தன்று வழங்கப்பட வேண்டும் என அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி நிர்வாகம் முதலியவற்றால் ஓய்வூதியக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை காலமும் ஓய்வூதியப் பகுதியே இதனை கையாண்டு வந்தது. (எ-க-10)

## சந்திரிகா அனுருத்தவுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் முப்படைத் தளபதிகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் இவர்களின் இலக்கு இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அவர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது. (ஒ-3)

## 4 தேசத்துரோகிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் பெரும் எண்ணிக்கையான மக்கள் முன்னிலையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

வன்னி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நீதன் தலைமையில் நடந்த விளக்கக்கூட்டத்தை தொடர்ந்து நான்கு தேசத்துரோகிகளுக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

வவுனியா வடக்கு கோட்ட உதவிக்கல்வி அதிகாரியான சுப்பிரமணியம் மரியானந்தகுமார் [ஓமந்தை], கிராம சேவையாளர் தம்பிராசா தவபாலன் (ஓமந்தை), குருசாமி சுந்தரம் [ஓமந்தை], ஐயம்பிள்ளை சிவராசா (ஓமந்தை) ஆகியோருக்கே மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது [ஒ-3]

## குண்டுவீச்சுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொற்பதி வீதியைச் சேர்ந்தவர்.

★ செல்லத்துரை குணசிங்கராசா (வயது 26) பொற்பதி வீதியைச் சேர்ந்தவர்.

மற்றும் நாவலடியைச் சேர்ந்தவர்களான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மூவரது விபரம்:

★ செல்வராசா சதீஸ்குமார் [வயது 15] தலை சமுத்துடன் துண்டாடப்பட்டிருந்தது. இவரது சகோதரர்—

★ செல்வராசா தேவச்செல்வன் [வயது 13] இவரது வயிறு பிளந்து காணப்பட்டது.

இவர்கள் இருவரும் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை மாணவர்கள்.

★ புவனேந்திரன் சசிகபூர் (வயது 21) (ஒ-15-13-4)

## 2 மீனவரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஓட்டி வந்து விட்டதாகவும்—

கடலில் அட்டை பிடிக்க இறங்கிய மற்றிருவரின் நிலை தமக்கு தெரியவில்லை எனவும் கூறினர்.

குருநகரை சேர்ந்தவர்களான மனவக்பிள்ளை றொபேட் சுவிர் தசீலன் (வெள்ளை வயது 30), ... இருவருமே திரும்பிவராதவர்களாவர். (இ-51)

நீ நடந்த மண்ணில் இன்று
தீ படர்ந்து எரியுது,
வா தொடர்ந்து போரில் இணை,
வரும் இடர்கள் சரிப்போம்!

POLIO PLUS

ROTARY INTERNATIONAL

போலியோவை தடுங்கள்!

இது போன்ற சந்தர்ப்பம் இனிக் கிடைப்பது அரிது.

ஐந்து வயதுக்குக் குறைந்த உங்கள் பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து கொடுக்கத் தவறாதீர்கள்.

* உங்கள் உறவினர்களின் பிள்ளைகளும்...
* உங்கள் அயலவர்களின் பிள்ளைகளும்...

சொட்டு மருந்து பெற்றுக் கொள்ளுமாறு ஞாபகப்படுத்துங்கள்.

நினைவில் வைத்திருங்கள் நவம்பர் 4

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27- 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org